1972 மார்ச் 8]

நல விடுதி கட்டடம் மட்டும் கட்டி முடிக்கப்பட்டு, குடும்பக்கட்டுப் பாடு மருத்துவமனைக் கட்டடம் இன்னும் நடைமுறைக்கு வராமல் உள்ளது என்பது பொது சுகாதாரத் துறையினாலும், கயத்தார் பஞ்சாயத்து யூனியனாலும் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) கடம்பூரில் அரசு மருத்துவமனை இல்லை. ஆனால் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கிறது. அதில் குடும்பக் கட்டுப்பாடு நிலையத்திற் கான கட்டடம் கட்டி முடிக்கும் தருவாயிலுள்ளது.

கேரளாவுக்கு மாடுகள் செலவு

* 356 வினா—**திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலிருந்து கேரளாவுக்கு தினந்தோறும் ஆயிரக்கணக்கான மாடுகள் விற்பனைக்காக கொண்டுசெல்லப் படுவது உண்மையா ?

(இ) ஆம் எனில், இதைத் தடுப்பதற்கான நடவடிக்கை ஏதேனும் எடுக்கப்பட்டு உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) ஒவ்வொரு வாரமும் சராசரியாக 2,000 முதல் 3,000 மாடுகள் கேரளாவுக்குக் கொண்டு செல்லப்படுகின்றன. வளர்ப்பதற்கு அவை பயனற்ற தாக இருப்பதாலும் இறைச்சிக்காக மட்டுமே பயன்படுவதாலும், கேரளாவுக்கு அவை கொண்டு செல்லப்படுவதைத் தடுக்கவேண்டு மென்று எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

திரு. பி. எஸ். மணியன் : தலைவர் அவர்களே, தினசரி தென் மாவட்டங்களிலிருந்து இப்படி ஏராளமான மாடுகள் கேரளா வுக்குப் போவதால் தென் மாவட்டங்களிலே கால்நடைப் பஞ்சம் ஏற்பட்டு விடுமோ என்ற அச்சம் இருக்கிறது. அதைத் தடுப்ப தற்கு அரசு இனியாவது நடவடிக்கைகள் எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, கேரளாவுக்கு அனுப்பப்படுகிற பெரும்பாலான மாடுகள் அடிமாடு களாகத்தான் அனுப்பப்படுகின்றன. அடிமாடுகள் எண்ணிக்கை யிலே குறைவதாலே எந்த அளவுக்கு மக்களுக்குப் பலன் வளரும் என்பதையும் பார்க்கவேண்டும். நாம் கேரளாவுக்கு அனுப்பக் கூடாது என்று சொல்வதைக் காட்டிலும் மாட்டு இறைச்சியைப் பக்குவப்படுத்துகின்ற தொழிற்சாலையை அமைக்க இங்கே யாராவது முன்வந்தால் இங்கேயே அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம். எனவே இதற்கிடையே இங்கேயிருந்து அங்கே அனுப்பக்கூடாது என்ற கருத்தை மட்டும் வலியுறுத்துவது பொருத்தமானதல்ல.

திரு. கே. டி. கே. தங்கமணி: இரண்டாயிரம் மாடுகள் அனுப்பப்படுகின்றன. அவைகள் அடிமாடுகள்தானா என்று பரிசோதிப்பதற்கு ஏதாவது ஏற்பாடு உண்டா? சில சமயங் களிலே நல்ல மாடுகள் அனுப்பப்படுவதைக்கூட எங்களாலே பார்க்க முடிகிறது.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: நல்ல மாடுகளாக இருந்தால் தகுந்த விலை கொடுத்துத்தான் வாங்கிப் போவார்கள். மேல் நாடு களில் இப்படிப்பட்ட மாடுகளை இறைச்சிக்காக என்றே வளர்த்து இறைச்சித் தொழிற்சாலைக்கு அனுப்பி பக்குவப்படுத்தி விடுகிறார்கள். இங்கே நாம் இறைச்சியைப் பக்குவப்படுத்துகின்ற தொழிற்சாலையைப் பெறுததாலே கேரளாவுக்கு அனுப்பப்படுகின்ற சூழ்நிலை இருக்கிறது. இதனாலே மாடுகள் வளர்ச்சிக்கு எந்த விதமான நஷ்டமும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அனாதைகளின் சவ அடக்கம்,

* 357 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அனாதைகளின் சவ அடக்கத்திற்கு உதவி செய்ய திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அனாதைகளின் சவ அடக்கத்திற்கு உதவிசெய்ய முன்னதாகவே அரசு ஆணை பிறப்பித்துள்ளது, அங்கங்கேயுள்ள ஊராட்சிமன்றங்கள்,